செ.வெ.எண். 30 நாள்: 12.02.2020

**தேசிய நுகர்வோர் தினவிழாவையொட்டி இன்று ( 12.02.2020) நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.செ.சாந்தி அவர்கள் பாராட்டு சான்றிதல்களை வழங்கினார்.**

கிருட்டினகிரி மாவட்ட உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை சார்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.செ.சாந்தி அவர்கள் தலைமையில் "இந்திய நுகர்வோருக்கு ஒரு திருப்புமுனை: நுகர்வேர் பாதுகாப்பு சட்டம், 2019" என்ற தலைப்பில் தேசிய நுகர்வோர் பாதுகாப்பு தினவிழா இன்று ( 12.02.2020) நடைப்பெற்றது. மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் திரு.எஸ்.கே.கனகராஜ் வரவேற்புரை ஆற்றினார்.

**மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் உரையாற்றும் போது:**

ஒவ்வொரு ஆண்டும் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை சார்பாக தேசிய நுகர்வோர் பாதுகாப்பு தினவிழா நடைபெற்று வருகிறது. நுகர்வோர் உரிமை என்று தெரிந்து கொண்டு பொருட்கள் வாங்கும்போது தரமான பொருட்களா என சரிபார்த்து வாங்க வேண்டும். பொருட்களை வாங்கியதற்கான ரசீதுகள் கேட்டு பெறவேண்டும். பள்ளி மாணவ மாணவியர்கள் பொருட்கள் வாங்கும் போது காலாவதியான பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறதா என பார்த்து வாங்க வேண்டும். மேலும் வீட்டில் படிக்காத பெற்றோர்கள் அவ்வாறு வாங்கி இருந்தால் அதனை பார்த்து தெரிவித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மேலும் நுகர்வோர் உரிமைகள் பற்றி தெரிந்துக் கொண்டு நுகர்வோர் நீதிமன்றங்களை நாடி இழப்பீடு கோரலாம். ஆகவே பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்கள் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும் என மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.செ.சாந்தி அவர்கள் உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் நுகர்வோர் தினத்தையொட்டி நடைப்பெற்ற ஓவியம் வரைதல், கவிதைப்போட்டி, கட்டுரை ஆகிய போட்டிகளில் வெற்றிப்பெற்ற பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ்களை மாவட்ட வருவாய் அலுவலர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பிற துறையைச் சார்ந்த அரசு அலுவலர்கள், பறக்கும்படை தனி வட்டாட்சியர், ஒசூர் குடிமைப் பொருள் வழங்கல் தனி வட்டாட்சியர், அனைத்து வட்ட வழங்கல் அலுவலர்கள் மற்றும் பதிவுபெற்ற தன்னார்வ நுகர்வோர் அமைப்பினர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் கிருட்டினகிரி குடிமைப் பொருள் வழங்கல் தனி வட்டாட்சியர் எஸ்.ஜி.குருநாதன் நன்றியுரை ஆற்றினார்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.